பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 05 வெள்ளிக்கிழமை (20.11.1992) UTHAYAN — A Lively National Tamil Daily ஒளி 358

## அளவெட்டி, பண்டத்தரிப்புப் பகுதிகளில் பொம்மர்கள் நேற்று குண்டுவீச்சுத் தாக்குதல்

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளில் நேற்று பொம்மர்கள் இருவேறு தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

மூற்பகல் 10.45 மணியளவில் மூன்று பொம்மர்கள் அளவெட்டி வடக்கு மற்றும் மாதகலை அண்டிய பகுதிகளில் குண்டு வீச்சுக்களை நடத்தின.

குண்டு வீச்சு நடந்த சமயம் அப்பகுதிகளிலுள்ள வயல்களில் களை பிடுங்கிக் கொண்டிருந்தவர்கள் வயல் வரம்பு ஓரங்களில் குப்புறப் படுத்துத் தப்பிக் கொண்டனர்.

பின்னர் நண்பகல் 12 மணியளவில் பண்டத்தரிப்புப் பகுதியில் மூன்று பொம்மர்கள் தாக்குதல்களை நடத்தின. பண்டத்தரிப்புச் சந்திப் பகுதியிலும் குண்டுகள் விழுந்து வெடித்ததாகத் தெரியவருகிறது.

பண்டத்தரிப்பில் தென்னிந்திய திருச்சபை, மின்தறி நெசவு நிலையம், வை.எம்.சி.ஏ. உள்ள இடங்களுக்குச் சமீபமாகவே குண்டுகள் விழுந்து வெடித்தன என்று கூறப்பட்டது.

குண்டுவீச்சுக்களினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை. [த-15-28-68-13]

# செட்டிகுளத்தில் துணிகரத் தாக்கு
# 10 ராணுவத்தினர் உயிரிழந்தனர்

### பத்து காவலரண்கள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 20

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை வேளையில் விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரமான அதிரடித் தாக்குதலில் பத்துக்கு மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர். பத்துக் காவலரண்கள் தகர்க்கப்பட்டன. பெருமளவு இராணுவ தளபாடங்களையும் புலிவீரர்கள் அங்கு கைப்பற்றினர்.

நேற்று அதிகாலை 12 மணி 04 நிமிடமளவில் செட்டிகுளம் இராணுவ முகாம் பகுதியில் தொடர்ச்சியாக அமைந்திருந்த காவலரண்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதல் சம்பவத்தின் போது இராணுவத்தினர் பலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆர்.பி.ஜி., 60 மி.மீ. மோட்டார், 40 மி.மீ பிஸ் (6 ஆம் பக்கம் பார்க்க)

### கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

செட்டிகுளம் பகுதியில் நடத்தப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய இராணுவத் தளபாடங்களின் விவரம் வருமாறு:- — 01

★ ஆர்.பி.ஜி. — 01
★ 60 மி.மீ. மோட்டார் — 01
★ 40 மி.மீ. பிஸ்டல் — 02
★ ஏ.கே.எம்.எம்.ஜி. — 04
★ ரி-56 துப்பாக்கி — 01
★ எல்.எல்.ஆர். — 03
★ ஆர்.பி.ஜி. ஷெல் — 03
★ 60 மி.மீ. பரா வெளிச்சக் குண்டுகள் — 08
★ ஏ.கே.எம்.எம்.ஜி. ரவைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இரு வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், நவ. 20

செட்டிகுளம் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் சம்பவத்தில் முல்லைத்தீவுப் பகுதி முன்னாள் துணைப் பொறுப்பாளர் மேஜர் ஆதித்தன் (இல்லப்பு ஜெயதாஸ் — தம்ப (6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் ஆட்குறையைப் போக்க தமிழ் குழுக்களின் உதவி பெறப்படும்

கொழும்பு, நவ. 20

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசுப்படையினர் மத்தியில் நிலவும் ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கடுதலான ஆட்களைத் தரும்படி கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களிடம் இராணுவம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" முன் கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறது.

தமிழ்க் குழுக்களின் தலைவர்களும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் இது தொடர்பான பேச்சுகளை நடத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படு [6 ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரர் வாரம் நாளை ஆரம்பம்;
### அவர்கள் துயிலும் இல்லங்களில் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 20

மாவீரர் எழுச்சி வாரம் இன்று பூர்த்தியாகி, மாவீரர் வாரம் நாளை ஆரம்பமாகிறது. இம்மாதம் 27 ஆம் திகதி வரை சேர்ட்ட, வட்ட மட்டங்களில் மாவீரர் வார நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நடைபெற உள்ளன.

இன்று பூர்த்தியாகும் மாவீரர் எழுச்சி வாரத்தில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். தமது பகுதிகளையும், [6 ஆம் பக்கம் பார்க்க]

## தோப்பூர் பாலம் கண்ணியில் தகர்ந்தது!

மூதூர்ப் பகுதியில் உள்ள தோப்பூர் பாலம் நேற்று நிலக் கண்ணி ஒன்று வெடித்ததில் தகர்ந்து போனது என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவ வாகனம் ஒன்றுக்கு இலக்கு வைத்தே இக் குண்டு வெடிக்கவைக்கப்பட்டது என்றும்—

ஆனால் அக்குண்டு இராணுவ வாகனம் வருவதற்கு முன்பாகவே வெடித்து விட்டது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளே நிலக்கண்ணி வெடித் தாக்குதலை நடத்தினர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-எ-5)

## பலத்த பாதுகாப்புடன் தளபதியின் இறுதிச் சடங்கு

கொழும்பு, நவ. 20

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவின் இறுதிச் சடங்குகள் நேற்று மாலை கொழும்பு கனத்தை மயானத்தில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நடைபெற்றன;

ஜெனரல் கொப்பேகடுவ (6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர்கள் கைது

கொழும்பு, நவ. 20

ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பிலும், சுற்றியுள்ள இடங்களிலும் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது.

## மேலும் குண்டுகள் வெடிக்குமாம்

கொழும்பு, நவ. 20

கொழும்பு மாநகரில் மேலும் பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்று பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி.பி. விஜேதுங்கா எச்சரித்துள்ளார். (இ-எ)

## மண்டூரில் 150 தமிழர் கைது

யாழ்ப்பாணம், நவ. 20

மட்டக்களப்பில் மண்டூர்ப் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி 150 தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப தமிழர்கள் அனைவரும் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் — அவர்கள் பற்றிய மேலதிக தகவல்கள் எதுவும் இது வரை அறிய முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## மண்டைதீவில் கைதான ஐவர் காணாமற் போய்விட்டனர்

### மன்னிப்புச் சபை தகவல்

கொழும்பு, நவ 20

மண்டைதீவில் உள்ள பிள்ளையார் கோவிலில் வைத்து கடந்த 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஐந்து தமிழர்கள் காணாமற் போய்விட்டனர்.

சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு இது விஷயம் அறிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் சாட்சிகள் செஞ்சிலுவைச் (6 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சி ஆஸ்திரேலியா இன்னும் கைவிடவில்லை

கொழும்பு, நவ. 20

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் விஷயத்தில் பொது நலவாய அமைப்பு மூலம் மத்தியஸ்தம் செய்யத் தாம் விரும்பம் தெரிவித்து ஆஸ்திரேலிய அரசாங்கம் எடுத்த அந்த முன்முயற்சி இன்னமும் கைவிடப்படவில்லை.

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய பிரதிநிதி திருமதி ஸ்ரெபானி ஷோ அப்படி முன் கண்டவாறு தெரிவித்தார்.

இத் தகவலை சண்டே ரைம்ஸ் வெளியிட்டிருக்கிறது.

"1990 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா இம் முன் முயற்சியை எடுத்தது.

"ஆஸ்திரேலிய அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சி செய்ய விருப்பத்தை தெரிவித்துள்ளது. இலங்கை அரசுக்கு இது தெரியும்" என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த நான்காம் திகதி ஆஸ்திரேலிய செனட்டில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித் [6 ஆம் பக்கம் பார்க்க]

தேசத்தை நீங்கள் நேசிப்பது உண்மையானால் பசிய மரங்களில் பாசத்தை வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை:

# அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்தன

அடுத்த மாதம் ஏழாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேரசூசி ஆகியன நேற்று வந்து சேர்ந்தன.

விமான மூலம் கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் இவற்றை இங்கு எடுத்துவந்திருந்தார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும் என்று பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அதிபர்கள் தமக்குரிய கோட்ட அலுவலகங்களில் எதிர்வரும் 26 ஆம் திகதி சேகரித்து, விநியோகிக்கும் படியும் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

தீவகம், மற்றும் பண்டத்தரிப்பு கல்வி கோட்டமாகிக்கப்பட்ட பகுதிகளில் முகவரிகளையுடைய பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அந்தந்தக் கோட்டங்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படும் என்றும் —

பரீட்சார்த்திகள் அந்தந்தக் கோட்டங்களிலிருந்து 26 ஆம் திகதி அனுமதி அட்டைகளைச் சேகரிக்கலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தப் பரீட்சார்த்திகளுக்கான வினாத்தாள்களின் முதல் தொகுதி அடுத்த மாதம் 4 ஆம் திகதி விமானம் மூலம் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-3-162]

### எழுதுநர் பரீட்சை

அரச மற்றும் மாகாண சேவையில் உள்ள எழுதுநர்களை எழுதுநர் சேவையின் இரண்டாம் வகுப்பின் 'அ' பிரிவில் நியமிப்பதற்கான பரீட்சை நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை யாழ். கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். [ஒ-5]

## இன்று

உடுவில், நவ. 20

சுந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வணிக மாணவர் மன்றத்தினர் நடத்தும் 'வணிக விழா' இன்று வெள்ளி முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். [ஒ-152]

★ ★ ★

சுழிபுரம், நவ. 20

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், தாபகர் தினமும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. [ஒ-28]

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணம் கடல் வீதியில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் இன்று மாலை 6 30 மணிக்கு மாவீரர் எழுச்சிக் கூட்டம் நடைபெறும். (ஒ-111)

## வடமராட்சி கடலில் சூடு

வடமராட்சி கடற்பரப்பில் நேற்று வியாழன் அதிகாலை மீன்பிடிக்கச் சென்ற கள்ளமிகள், கட்டுமரங்களை நோக்கி கடற்படையினர் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அதனை அடுத்து மீனவர்கள் கரை சேர்ந்தனர். [ஒ-118]


யா/புங்குடுதீவு மேற்கு
அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம்

மாவீரர் நாள்

லெப். குமரன்
(து. உதயகுமார்)



நினைவு மண்டபம் திறப்பு விழா

காலம்: 1992–11–21 மு. ப. 9 மணி 15 நிமிடம்
இடம்: யாழ். செட்டித்தெரு மெ. மி. வித்தியாலய முன்றில் (கின்னர் லேன் - யாழ்ப்பாணம்)

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அபிவிருத்திச்சபை,
பழைய மாணவர் சங்கம்.
(23327)



கண்ணீர்ப் பூக்கள் அஞ்சலி

அமரர் வேதமுத்து சாமுவேல்

V. சாமுவேல் 18- 11- 1992 அன்று காலமாகிவிட்டார் என்பதை அறிந்து அதிர்ச்சியடைந்தோம். இவர் யூனியன் கல்லூரியில் பல ஆண்டுகாலம் ஆசிரியராக கடமையாற்றி, கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். இவரின் மறைவு எமது கல்லூரிக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு எமது பிரார்த்தனைகள்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/ யூனியன் கல்லூரி,
தெல்லிப்பளை.
(5433)



கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்

டாக்டர் அ. இராஜதுரை
(ஓய்வுபெற்ற உதவி வைத்தியர்)

யாழ். சயன்ஸ் அக்கடமியின் நிர்வாக இயக்குனர் திரு. இ. அருட்செல்வம் அவர்களின் அன்புத் தந்தை காலமான செய்திகேட்டு ஆற்றொணாத்துயர் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினர் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், உதவி இயக்குனர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்கள்.

★ New Science Academy ★
Jaffna.
★ New Science Hall ★
Kannathiddy Rd,
Jaffna.
(23332)



43ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்



திருச்செல்வம் மேரியோசவ்

மண்ணில்: 28–07–1925
விண்ணில்: 10–10–1992

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
அரு:- 11:25

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (21-11-92) சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலியின் பின்னர் அச்சுவேலி புனித திரேசா மகளிர் பாடசாலையில் இடம்பெறும் மதிய உணவில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

12-10 92 இல் நடைபெற்ற அன்னாரின் மரணச் சடங்குகளில் பங்குபற்றியவர்களுக்கும், பல வழிகளிலும், எமக்கு உதவிகள் செய்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"நீற்றா வனம்"
சங்கானை வீதி,
அச்சுவேலி.
(23328)



வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி.

# கேள்வி அறிவித்தல் - 1993

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கடைகள் ஆகியவற்றை 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 04-12-1992ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் அப்பகுதி பிரதேச சபை உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளால் கேள்வி வைப்புப்பணமும், கேள்விப் பத்திரப்பணமும் செலுத்தவதன் பேரில் 01-12-1992 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப் பிரதியை விசேட ஆணையாளர், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகம், நீர்வேலி என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது வலி. கிழக்குப் பிரதேச சபை நீர்வேலி தலைமை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இன்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய குத்தகையை எடுத்து நடத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எதுவித நட்ட ஈடுமின்றிக் குத்தகை உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. வேறு விபரங்கள் அறிய விரும்பின் அந்தப் பிரதேச சபை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கந்தையா கனகரத்தினம்,
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி.

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
1992-11-16.

| உப அலுவலகம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| **உரும்பராய், ஊரெழு** | | | |
| 1. உரும்பராய் ஆட்டிறைச்சிக் கடை | 150-00 | 500-00 | 44550-00 |
| 2. உரும்பராய் மாட்டிறைச்சிக் கடை | 150-00 | 500-00 | 40250-00 |
| 3. ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 100 00 | 150-00 | 5500-00 |
| 4. உரும்பராய் மத்திய சந்தை | 150-00 | 500-00 | 15000-00 |
| 5. ஊரெழு சந்தை | 100-00 | 100-00 | 660-00 |
| 6. ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 100-00 | 100-00 | 12500-00 |
| **நீர்வேலி** | | | |
| 1. நீர்வேலி வடக்கு பொதுச்சந்தை | 50-00 | 100-00 | 1800-00 |
| 2. நீர்வேலி மத்திய சந்தை | 50-00 | 50-00 | 200-00 |
| 3. நீர்வேலி உப அலுவலக வளவு | 25-00 | — | 200-00 |
| 4. நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 50-00 | 100-00 | 1350-00 |
| 5. நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 50-00 | 150-00 | 15000-00 |
| **அச்சுவேலி** | | | |
| 1. அச்சுவேலிப் பொதுச் சந்தை | 150-00 | 1000-00 | 155000-00 |
| 2. அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 150-00 | 1000 00 | 205000-00 |
| 3. அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 150 00 | 500-00 | 7000-00 |
| 4. வளலாய்/தம்பாலை பொதுச் சந்தை | 50-00 | 50-00 | 1090-00 |
| **புத்தூர்** | | | |
| 1. புத்தூர் மத்திய சந்தை | 100-00 | 100-00 | 12500 00 |
| 2. புத்தூர் மத்திய சந்தை - மாட்டிறைச்சிக் கடை | 150-00 | 250-00 | 40000-00 |
| 3. ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 50-00 | 100-00 | 1500-00 |
| 4. ஆவரங்கால் மீன் சந்தை | 50-00 | 100-00 | 3180-00 |
| 5. வாதரவத்தை மாட்டிறைச்சிக் கடை | 100-00 | 150-00 | 5500-00 |
| **கோப்பாய்** | | | |
| 1. இருபாலை மீன் சந்தை | 50-00 | 100-00 | 1350-00 |
| 2. இருபாலைச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100-00 | 250-00 | 6600-00 |
| 3. இருபாலைச் சந்தை - மாட்டிறைச்சிக் கடை | 100-00 | 250 00 | 80000-00 |
| 4. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 100-00 | 150 00 | 7700-00 |
| 5. கோப்பாய் வடக்கு மரக்கறிச் சந்தை | 50-00 | 100-00 | 2000-00 |
| 6. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100-00 | 150-00 | 10000-00 |

[ஸி-3867]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி விசாக்களுடன் பயணம் செய்த

# 5 இலங்கைத் தமிழர்களை ஹங்கேரி நாடு கடத்தியது

கொழும்பு, நவ. 20
போலி விசாக்களுடன் ஜேர்மனிக்குள் பிரவேசிக்க முயற்சித்தபோது கைது செய்யப்பட்ட ஐந்து இலங்கைத் தமிழர்களை ஹங்கேரி பொலிஸார் கடந்த 12ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தினர்.

கொழும்பை வந்தடைந்த ஐந்து பேரையும் கட்டுநாயக்கா பொலிஸார் கடந்த 13ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் எல். யூ. ஜயசூரியா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நவாலி, கன்னாகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்கள் ஐவரும் முதலில் சிங்கப்பூர் சென்றனர். அங்கு இவர்கள் ஒவ்வொருவரும் தலா 3 லட்சம் ரூபா கொடுத்து ஜேர்மனி செல்வதற்கான போலி விசாக்களைப் பெற்றுக் கொண்டனர். பின்னர் மாஸ்கோ வழியாக ஹங்கேரி செல்வதற்கான பயண தஸ்தாவேஜுக்களையும் இவர்கள் பெற்றுக் கொண்டனர்.

இத்தகவல்களை கட்டுநாயக்கா பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் ரூபானந்தா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஐந்து சந்தேக நபர்களான சின்னராசா அந்தனி யோசப், கனகசபை சற்குண ரேபன், விநாசித்தம்பி தேவபாலன், நாகமுத்து சத்தியமூர்த்தி மற்றும் நடுத்தர வயதும் பெண்ணான முருகப்பன் சிறிவேல்ராணி ஆகியோரை நவம்பர் 20 வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

## கொடிய யுத்தத்திற்கு அரசு முடிவு காணும்

### ஜனாதிபதி பிரேமா பேச்சு

கொழும்பு, நவ. 20
சகல கட்சிகளிடம் இருந்தும் ஆலோசனைகளைப் பெற்று, எல்லோருக்கும் ஏற்புடைய ஒரு தீர்வை காண்பதன் மூலம் இக்கொடிய யுத்தத்திற்கு முடிவுகட்ட அரசாங்கம் எண்ணியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போது ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் குறிக்கோளை அடையும் நோக்கத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண தற்போது முயற்சி செய்து வருகின்றது— என்றும் அவர் சொன்னார்.

## ரத ஊர்வலத்துடன் நடந்த எழுச்சி விழா

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். தீவகக் கோட்டப் பிரிவினர் ஏற்பாடு செய்திருந்த மாவீரர் எழுச்சி வாரக் கூட்டம் புதன் மாலை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

எழுச்சிக் கூட்டத்தை ஒட்டிய மாவீரர் நினைவுச் சின்னம் தாங்கிய ரத ஊர்வலம் ஒன்று அன்று மாலை நகரில் பஸ்தியாம்பிள்ளை சந்தியில் ஆரம்பித்து சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சென்றடைந்தது.

பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பாண்ட் இசைக் குழுவினரும், ரத ஊர்வலத்தில் அணி வகுத்துச் சென்றனர். (இ-111)

## 'ரெலோ'வின் யோசனை அரசின் கட்டளையே!

### தமிழ்க் குழுக்கள் குற்றச்சாட்டு

கொழும்பு நவ 20
வடக்கு - கிழக்கு மாகாணத்தை இரண்டு மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற அடிப்படையிலான யோசனையை 'ரெலோ' அமைப்பு அரசாங்கத்தின் கட்டளைக்கு இணங்கவே சமர்ப்பித்துள்ளது.

இவ்வாறு கொழும்பிலுள்ள ஏனைய தமிழர் குழுக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

"சண்டே ஐலண்ட்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

## ராஜினாமா கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்தார்

### வன்செயல் குறைய உதவாதாம்

கொழும்பு, நவ. 20
கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோவின் படுகொலைக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே ஜனாதிபதி இதனை நிராகரித்தார்.

கிளான்சி பெர்னாண்டோ கொலையுண்ட சம்பவத்துக்கு பாதுகாப்பு அமைச்சர், மற்றும் முப்படையின் தளபதி என்ற வகையில் பொறுப்பேற்று ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உட்பட பல்வேறு எதிர்க்கட்சிகள் கூட்டறிக்கை ஒன்றின் மூலம் கோரி இருந்தது தெரிந்ததே.

இந்த கோரிக்கைக்கு பதில் விடும் முகமாக ஒரு நாகவில் உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாசா—

மக்களின் வாக்குகளினாலேயே தாம் பதவிக்கு வந்ததாகவும் தமது ராஜினாமாவினால் வன்செயல்கள் குறையும் சாத்தியம் இல்லை என்றும் தெரிவித்தார். (இ-ஏ)

## தமிழகத்துக்கு ரூ.500 கோடி இழப்பு

சென்னை, நவ. 20
அண்மையில் வீசிய சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக தமிழகத்தில் ஏற்பட்ட சொத்துகள் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் சுமார் 500 கோடி இந்திய ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் நரசிம்மராவுக்கு அனுப்பிய டெலக்ஸ் செய்தியில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முன்கண்ட தகவலை தெரிவித்தார். (இ-ஏ)

## லலித், காமினி குறித்து பிரேமா

இறந்த ஐ.தே.க. வைகட்டி எழுப்புவதாக உறுதி பவித்த லலித் அத்துலத் முதலியும், காமினி திஸநாயக்காவும் இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நடத்தி வருகின்றனர்.

களுத்துறையில் நடைபெற்ற ஐ.தே.க. அமைப்புக்களின் மாநாட்டில் பேசும் போது ஜனாதிபதி பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார். (த)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு 'ஒக்ஸ்பாம்' வேலை வாய்ப்பு

முறிகண்டி, நவ. 20
அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் பூநகரிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான வேலைத் திட்டம் ஒன்றை கிளிநொச்சி "ஒக்ஸ்பாம்" நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக பூநகரிப் புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகத்தின் உதவியுடன் வண்டிவெட்டி குளத்தை ஆழமாக்கி அம் மண்ணைக் கொண்டு குளத்தின் அணைக்கட்டை புனர் நிர்மாணம் செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புடன், அப்பகுதி மக்களின் குடி தண்ணீர் பிரச்சினையும் தீர வழி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—
முல்லைத்தீவு மாவட்டத்தின் தோராங்கண்டல், அம்பாள்குளம் பகுதிகளில் குடியேறி உள்ள அகதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன் மடமுடைத்த குளத்தின் உடைந்த அணைக் கட்டு திருத்தப்பட்டுள்ளது.

வடமாகாண ஒக்ஸ்பாம் பொறுப்பதிகாரி திரு. எஸ். ரி. பத்மநாதன் மேற்படி தகவல்களைத் தெரிவித்தார். (த-97)

## அகதிகளுக்கு 100 கொட்டில்கள்

வண்ணார்பண்ணை, நவ. 20
யாழ். மாவட்ட சர்வோதய இயக்கத்தினர் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்களுக்காக 100 கொட்டில் வீடுகள் அமைத்து வருகின்றனர்.

முருகமூர்த்தி கோயிலுக்கு அண்மையில் தற்பொழுது 63 வீடுகள் அமைத்து முடிக்கப்பட்டுவிட்டன. இந்த வீடுகள் உடுவில் உ. அ. அதிபர் பிரிவில்— பாடசாலைகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த குடும்பத்தினருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்படவுள்ளன. (த-162)

வலி. வடக்குப் பகுதியில்

## வெற்றிலைச் செய்கை அழிந்துவிடும் நிலையில்!

தெல்லிப்பழை, நவ. 20
குடாநாட்டில் — குறிப்பாக வலி. வடக்கில்— பாரம்பரியமாக நடந்து வரும் வெற்றிலைச் செய்கை அழிந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீவிநாயகர் படையினர் நிலை கொண்டுள்ள மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, பன்னாலை, கிழிலிட்டி, கருகம்பானை, இளவாலை மற்றும் கீரிமலை ஆகிய பகுதி களிலேயே வெற்றிலைத் தோட்டங்கள் கவனிப்பாரற்று அழிந்து வருகின்றன. இதனால் பல லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

பல வருடங்களுக்குப் பயன் தரக்கூடியதும்— தமிழ் மக்களின் மங்களப் பொருளாகப் பாவிப்பதுமான வெற்றிலைப் பயிர் அழிந்து வருவது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வெற்றிலைக் கொடிகள் முற்று முழுதாக அழிந்து போய்விட்டால், இனி இந்தியாவில் இருந்து தருவித்தே நடுகை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில், எதிர்காலத்தில் வெற்றிலைச் செய்கையை மீண்டும் ஆரம்பிக்க 'வெற்றிலைச் செய்கையாளர் அமைப்பு' ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. (த-68)

## மாவீரர் எழுச்சிவார நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 20
மாவீரர் எழுச்சி வாரத்தின் ஆறாம் நாளான இன்றும் கருத்தரங்குகள், சிரமதானப் பணிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் கோட்ட ரீதியாக வட்டப் பிரிவுகளில் நடைபெறுகின்றன.

கருத்தரங்குகள் வழமை போல மாலை வேளையில் வெவ்வேறு நேரங்களில் இடம்பெறும். விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் தலைமை உரைகளும், எழுச்சி உரைகளும் கருத்தரங்குகளில் இடம்பெறும்.

கருத்தரங்குகள்
கோப்பாய் வட்டம் நீர்வேலி திலீபன் ச.ச. நி., யாழ். வட்டம் முனைச் சந்தி திருவள்ளுவர் ச.ச. நி., நல்லூர் வட்டம் கொக்குவில் கலைமகள் ச.ச. நி., உடுவில் வட்டம் தாவடி காளியம்மன் ச.ச. நி., சங்கானை வட்டம் சங்கரத்தை ச.ச. நி., கரவெட்டி வட்டம் வளர்மதி ச.ச. நி., (பாடசாலை) ஆகிய இடங்களிலும்—

சாவகச்சேரி வட்டம் மீசாலை ஸ்ரீமுருகன் ச. ச. நி., தெற்பெலி பண்டிதர் குடியிருப்பு முஸ்லிம் வட்டாரம் கடற்புலிகளின் ஏற்பாட்டில் வடமராட்சி வடக்கு வட்டத்தில் முனை கட்டி றோ. க. த. பாடசாலைக்கு அருகாமையிலும் மற்றும் சுற்கோவளம் அ. த. க. பாடசாலைக்கு அருகாமையிலும் கருத்தரங்குகள் நடைபெறும்.

சிரமதானங்கள்
தீவகக் கோட்டம் முஸ்லிம் வட்டாரத்தில் மயானம் துப்புரவு செய்தல், வடிகால் துப்புரவு செய்தல், கோப்பாய் வட்டத்தில் கோப்பாய் வைத்தியசாலை வீதி, பழம் வீதி, அவன் வீதி துப்புரவு செய்தல், வலிகாமம் கிழக்கு வட்டம் அராலி மேற்கு வள்ளியம்மை வித்தியாசாலை, சரஸ்வதி வித்தியாசாலை சுற்றாடல், அ.மி. பாடசாலை துப்புரவு செய்தல், வடமராட்சி கிழக்கு வட்டம் மருதங்கேணி க. அ. அ. வளவு மனை சுற்றாடல், செம்பியன் பற்று அ.த.க. பாடசாலை சுற்றாடல், நாகர் கோவில் ம. வி. சுற்றாடல் துப்புரவு செய்தல்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மாவீரர் நினைவுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (த)

## மாவீரர் நாள் - 1992

**மாவீரர்களே!**

மண்ணிலா எங்கள் வீரரைப் புதைத்தோம்?
இல்லையே!
எங்கள் மனங்களில் அல்லவா விதைத்தோம்
இன்னும்; இதன் பிறகும் என்ன தான் தயக்கம்
எழுந்து வா தமிழீழ தாயகம் பிறக்கும்;

— தமிழீழ மாவீரர் பணியகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Robin EY 14 DX மிக நல்ல நிலையில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு. இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிலையம், இருபாலைச் சந்தி. சனி, ஞாயிறு நாட்களில் மட்டுமே பார்வையிடலாம். (23318)

### மணமக்கள் தேவையா

உங்கள் மணப்பிரச்சினையை அலைச்சல் இன்றி இலேசாகத் தீர்க்கலாம். சந்திப்பு சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (23158)

### இலவச திருமண சேவை

35 வயது, மிருகசீரிடம் சைவ போசனம், சுவிஸில் தொழில் புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் தேவை. விவாகம் இந்தியாவில் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23287)

### வகுப்புகள்

German & English Languages ஜேர்மன், ஆங்கிலம் பிரத்தியேகமாக, தனிப்பட்ட ரீதியில் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. தொடர்பு கொள்க: S. Sornalingam, Secretary, German Cultural Association, 4, Gopal Lane, Vannarponnai Jaffna (மனோகரா தியேட்டர் அருகாமையில்) (23323)

### அம்பாள் திருமண சேவை

Electronic Engineer 31 வயது, (சைவம்) U.K இல் வேலை பார்க்கும் மணமகனுக்கு அழகிய பட்டதாரி மணப்பெண் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். (23317)

### சித்திரம்

1992 க. பொ. த: (சா/த) தேர்வுக்குத் தோற்றும் மாணவர் திறமைச் சித்தி பெற்றுக் கொள்ள 'சித்திரம் ஆண்டு-11' புதிய பாடத் திட்டத்திற்கமைய உருவாகிறது! உங்கள் அபிமான ஆசிரியர் மசோதரன் (23273)

## தேடப்பட்டவர் ராணுவத்திடம்!

சுழிபுரம், நவ 20

தொல்புரம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் காணாமற் போயிருந்தார்.

அதை அடுத்து அவரது உறவினர்கள் சம்பந்தப்பட்டவரை எல்லா இடங்களிலும் தேடினர்; பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டது.

ஆனால் தற்பொழுது அவர் இலவாலையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம் சிக்கியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது சம்பந்தப்பட்டவர் படையினரிடம் சிக்கிக்கொண்டதாகக் கூறப்படுகிறது. (ஓ-28)

# நிவாரணப் பொருள்கள் மட்டுமே இனிக் கப்பலில்

## புனர்வாழ்வு அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ 20

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் உட்பட மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க மட்டுமே இனி கொழும்பில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு கப்பல் மூலம் அனுப்பும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இது தொடர்பாக யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

நிவாரணம் வழங்கத் தேவையான பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களை புனர்வாழ்வு அமைச்சு இனி அனுப்ப மாட்டாது என்றும் —

ஏனைய மக்களுக்கான பொருள்களை, முன்னர் நடைமுறையில் இருந்தபடி உணவுக்கட்டுப்பாட்டு திணைக்களம் மூலம் பெற நடவடிக்கை எடுக்குமாறும் — புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அத் திணைக்களத்தில் நிலவும் நிதிப்பற்றாக்குறை காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவந்தது.

யாழ். மாவட்டத்துக்கு பொருள்கள் அனுப்ப வேண்டுமானால், அவற்றுக்கு முற்பணம் செலுத்த வேண்டும் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஏற்கனவே யாழ் செயலகத்துக்கு அறிவுறுத்தி இருந்தது தெரிந்ததே. (இ-3)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 20

கொத்தணி அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று, இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று பண்டத்தரிப்புக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பட்ஜெட் வாக்கெடுப்பு

கொழும்பு, நவ. 20

1993 வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றத்தில் 55 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 127 எம்.பிக்களும் எதிராக 72 எம்.பிக்களும் வாக்களித்தனர். (இ-எ)

## கள் விற்பனை புதிய பாணியில்!

தெல்லிப்பளை, நவ. 20

தென்னங்கள்ளு, பனங்கள்ளு ஆகியவற்றின் விலைகள் ஓரளவு உயர்ந்துள்ளபோதிலும், அவற்றின் விற்பனை முறையில் இப்போது புதிய மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

வலி. வடக்கு பகுதி உட்பட பல இடங்களிலும் இப்போது தவறணைக் கொட்டில்களில் மேசை, வாங்கு போடப்பட்டு, 'கிளாஸ்'களில் கள் விநியோகிக்கப்படுகிறது. கள்ளுக்கு உவப்பான பொருள்களும் கள் விற்பனை நிலையங்களில் விநியோகிக்கப்படுகின்றன. (ஓ-68)

### பிரேமாவின் விஜயத்தைத் தொடர்ந்து

## இந்திய - இலங்கை உறவில் நல்ல வளர்ச்சியாம்!

கொழும்பு, நவ. 20

இந்திய - இலங்கை உறவுகள் முழுமூச்சுடன் வளர்ச்சியடைந்து வருகின்றன.

தகவலறிந்த வட்டாரங்கள் முன்கண்டவாறு கூறுகின்றன என்று 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

அண்மையில் ஜனாதிபதி பிரேமதாஸா புதுடில்லிக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்தே இரு நாடுகளின் உறவுகளிலும் புதிய வளர்ச்சி காணப்படுவதாகவும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு இந்தியக் கப்பல் ஒன்றை அமர்த்துவது குறித்து இரு நாடுகளும் தற்போது பேச்சுக்கள் நடத்தி வருகின்றன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)


## விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி!

விவசாயிகளே! உங்கள் நெற்பயிருடன் சேர்ந்து வளரும் அகன்ற இலைகள், கோரை இனங்களையும் கட்டுப்படுத்தும் களைநாசினி M.C PA 40, 60 மற்றும் கிருமி நாசினிகள், பங்கச நாசினிகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள:

லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்,

219, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(5585)

## MATHS CENTRE

NELLIADY

A/L 94

சனி

★ காவிகள் 6-15 a m.

★ நுண்கணிதம் 8-00 a. m

திரு. அருளானந்தம்

நடைபெறுகின்றது.

(சி-3870)


## சகல தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் ஓர் அறிவித்தல்

மாவீரர் தினத்தை புனிதமாகவும், சிறப்பாகவும் கொண்டாடும் பொருட்டு சகல கல்வி நிறுவனங்களும், யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, மருதனார்மடம் கோட்டங்கள் கோண்டாவிலில் அமைந்துள்ள மாவீரர் பணியகத்திலும், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கோட்டங்கள் அந்தந்த கோட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் பணியகத்திலும் சென்று மாவீரர் கையேட்டையும், தேசியக் கொடியையும் பெற்று, மாவீரர் கையேட்டின் பணிப்புரைப்படி நடத்துமாறு வேண்டுகின்றோம்.

பொதுச் செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(23319)

### பங்களாதேஷில்

## 'பரசிற்றமோல்' அருந்திய 250 குழந்தைகள் மரணம்

டாக்கா, நவ 20

பங்களாதேஷில் "பரசிற்றமோல்" என்ற மருந்தை பாவித்த 250 குழந்தைகள் இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குழந்தைகளுக்கு காய்ச்சல், தடிமன் நோய்களுக்கு இந்த மருந்து வழங்கப்பட்டதாகவும்—

அந்தக் குழந்தைகள் சிறுநீரகக்கோளாறு ஏற்பட்டு உயிரிழந்ததாகவும்—

இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தப்படவிருப்பதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்ததாகவும் பி. பி. ஸி. அறிவித்தது.

"பரசிற்றமோல்" மருந்தே குழந்தைகளுக்கு ஏற்பட்ட சிறுநீரகக்கோளாறுக்கு காரணமாகவிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக டாக்கா மருத்துவத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் இந்த மருந்தின் மாதிரி பரிசோதனை செய்யப்பட்ட சமயம், அந்த மருந்துவகையில் சில வகை நஞ்சு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக டாக்கா வைத்தியசாலை இயக்குநர் தெரிவித்தார். (உ-3)

## ஆயிரத்து 50 மெ.தொன் சீனி குமண கப்பலில் வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 20

எதிர்வரும் 24 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமண' கப்பலில் ஆயிரத்து 50 மெற்றிக்தொன் சீனி எடுத்து வரப்படவிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

அக்கப்பலில் 985 மெற்றிக்தொன் அரிசி, 80 மெற்றிக்தொன் பருப்பு, 15 மெற்றிக்தொன் பாக்மா, ஆகிய பொருள்களும் எடுத்துவரப்படுகின்றன.

அத்துடன் தபால் பொதிகளும் வருகின்றன. (இ-3)

## காணி சம்பந்தமான கலந்துரையாடல்

நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகத்தினரால், இன்று வெள்ளி மாலை 3-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் உள்ள குமாரசுவாமி மண்டபத்தில், நில அளவை. நிலவரைபடம், நில அளவைப் பயிற்சி. காணிப் பிரச்சினைகள், காணிச் சட்டங்கள், காணி நிர்வாகம், காணிப் பதிவு இவற்றுடன் சம்பந்தப்பட்டோருக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளது.

இவற்றுடன் சம்பந்தப்பட்ட சகலரையும் இந் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு இக் கழகத்தின் நிர்வாகிகள் அழைப்பு விடுக்கின்றனர். (இக் கலந்துரையாடலின் விபரத்திற்கு 18ஆம் திகதிய பத்திரிகைகளைப் பார்க்கவும்)

கலந்துரையாடலின் முடிவில் தூர இடங்களுக்குத் திரும்பிச் செல்வோருக்கான வாகன வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- நிர்வாகத்தினர்.

(இ-3865)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## சீரழிய வைக்கும் போக்கு ஏனோ?

யுத்த நிறுத்தம் குறித்துப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் அரசுக்கு எழவில்லை— இவ்வாறு பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா பதிலளித்திருக்கிறார்.

குவாக்கர் சமாதானக் குழு யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது குறித்தும் பின்னர் கொழும்பில் அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது குறித்தும் ஸ்ரீ. ல. சு. கட்சியைச் சேர்ந்த எம். பி. ஒருவர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கோரிக்கை எதனையும் முன்வைக்காமையால், யுத்த நிறுத்தம் குறித்துப் பரிசீலிக்கும் தேவை அரசுக்கு உண்டாகவில்லை என்று பிரதமர் கூறியுள்ளார்.

பிரதமரின் இந்தப் பதிலின் தொனி, அரசாங்கம் தானாக யுத்தத்தை நிறுத்துவது குறித்துப் பரிசீலிக்கமாட்டாது. விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தம் செய்யுமாறு கேட்டால் மட்டுமே அதனைப் பரிசீலிக்கும் என்ற அர்த்தத்தில் அமைந்துள்ளது!

யுத்தம் நடப்பதால் நாட்டு மக்களோ, அரசாங்கமோ பாதிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகள் மட்டும் தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதனால் அவர்களே யுத்தத்தை நிறுத்துமாறு கேட்க வேண்டும். அவ்வாறு கேட்கும் பட்சத்தில் மட்டுமே அரசு அதனைப் பரிசீலிக்கும் என்ற மறை பொருளும் அதற்கு உண்டு.

யுத்தம் நடப்பதால் அபிவிருத்தி பாதிக்கப்படுகிறது என்று பத்து நாட்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் வைத்துச் சொன்ன பிரதமர், யுத்த நிறுத்தம் கொண்டு வருவது குறித்துப் புலிகள் கேட்டாலே பரிசீலிக்க முடியும் என்று கூறுவது இரட்டை முகம் காட்டுவதாகும்.

தமிழர்கள் நடத்துவது உரிமைப் போர்; அடிமைத் தளையிலிருந்து விடுபடுவதற்கான சுதந்திரப் போர். ஆகையால் அந்தப் போரின் விளைவாகத் தமிழர்கள் பல கஷ்டங்களையும், துன்பங்களையும், உயிரிழப்புகளையும் அனுபவிக்க நேரிடும் என்பது முன்கூட்டியே எதிர்பார்த்ததே.

யுத்தத்தினால் தமிழர்களைப் போலவே சிங்களவர்களும் ஏனையோரும் பாதிக்கப்படுகிறார்கள். நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டுப் போகிறது. சிப்பாய்கள் உடையில் நின்று சிங்களவர்களும் பலியாகிறார்கள். இதனை பிரதமர் அறியவில்லையா? அரசு உணரவில்லையா?

சிங்களப் பொதுமக்களிடையே நடத்திய ஆய்வில், அவர்களை நேரில் கண்டு பேசி நடத்திய மதிப்பீட்டில் யுத்தத்தை நிறுத்தி அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக உள்ளதாக மதகுருமார்— அறிஞர் சமாதானக் குழுவின் தலைவர் யோகான் தேவானந் தெரிவித்திருக்கிறார்.

சிங்கள மக்களின் பிரதிநிதிகள் என்று அவர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடம் ஏறியவர்கள், மக்களின் கருத்துக்கு மதிப்பளிப்பதாகவும் இல்லை. யதார்த்தத்தை, உண்மையை உணருபவர்களாகவும் இல்லை.

தமிழர் பிரச்சினை தேசத்தின் முதற் பெரும் பிரச்சினை. யுத்தம் வடக்கு - கிழக்குடன் மட்டுப்படுத்தப்படாமல் நாடு முழுவதிலும் விஸ்தாரமடைகிறது. இந்த இரண்டையும் மனதிற் கொண்டு யுத்தத்தை அரசாங்கமே நிறுத்தவேண்டும். யாராவது கேட்டால் தான் நாம் பரிசீலிப்போம் என்று கூறிக்கொண்டிருப்பது படு முட்டாள்த்தனம். நாட்டையும், சிங்கள மக்களையும் பலிகொடுக்க, சீரழிக்க வழிப்படுத்தும் மடத்தனமான போக்கு. ஜனாதிபதி, பிரதமர், ஏனைய அமைச்சர்கள், எதிரணியினர் இதனை உணருவது எப்போது?

### கடற்படைத் தளபதி கொலைச் சம்பவம்;

# காயமடைந்தவரை ஏற்றிச் செல்ல மறுத்த இராணுவ அதிகாரி விளக்கம்

கொழும்பு, நவ. 20

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ கொல்லப்பட்ட சம்பவத்தின் போது காயமடைந்த பிளைட் லெப்டினன்ட் குணசேகராவை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல மறுத்ததாகக் கூறப்படும் இராணுவ அதிகாரி ஹஸன் பஸ்லி அது தொடர்பாக நீதிமன்றில் விளக்கமளித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவின் மீது இராணுவ மேஜர் ஹஸன் பஸ்லி வாபிர் கோட்டை நீதிபதி திருமதி என். கி. மீகே. சன்னாஸ்கல முன் ஆஜராகி சாட்சியமளித்தார்.

மட்டக்களப்பு இராணுவ முகாமின் விசேட பிரிவின் முதலாவது ரெஜிமன்டின் மேஜராகப் பதவி வகிக்கும் ஹஸன் வாபிர் (23) சாட்சியம் அளிக்கையில் தெரிவித்ததாவது;

சம்பவம் நடந்த அன்று காலை 8-30 மணியளவில் இராணுவ தலைமைக் காரியாலயத்தில் சிரேஷ்ட அதிகாரிகள் மத்தியில் இராணுவத் தளபதி உரையாற்றவிருந்தார்.

அதில் கலந்து கொள்வதற்காக நான் நுகேகொடையில் உள்ள எனது வீட்டில் இருந்து காலை 7-55க்குப் புறப்பட்டேன்.

கூட்டத்துக்குச் செல்வது தாமதமாகி விட்டதால், கடற்படைத் தளபதி பயணஞ் செய்த காருக்கு பாதுகாப்பாகச் சென்ற வாகனத்தைத் தாண்டிச் செல்லுமாறு எனது வாகனத்தின் சாரதிக்கு உத்தரவிட்டேன்.

இடது கைப்பக்கத்தில் இருந்து இரு வாகனங்களையும் தாண்டி எனது வாகனம் சென்றது.

அப்படித் தாண்டிச் செல்லும் போது கடற்படைத் தளபதி பயணஞ் செய்த காருடன் சமாந்தரமாக மோட்டார் சைக்கிள் ஒன்று சென்று கொண்டிருந்ததை நான் கண்டேன்.

தளபதியின் காரைத் தாண்டிய பின்னர் பலத்த சத்தத்தைக் கேட்டேன். பத்து யார் முன்னதாக எனது ஜீப்பை நிறுத்திவிட்டு, விசாரணை நடத்த வந்தேன்.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் பிறவுண் நிற 'ஜாக்கட்டும்' ஹெல்மட்டும் அணிந்து இருந்தார். மேலும் அடையாளங்கள் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

நான் ஜீப்பில் இருந்து வெளியே வந்த போது, சேதமடைந்த காரில் மூன்று பேரின் உடல்களைக் கண்டேன். ஒருவரின் உடல் வீதியில் கிடந்தது. யாரோ ஒருவர், "கடற்படைத் தளபதியின் கார் எங்கே" என்று என்னிடம் கேட்டார்.

புகைமண்டலத்தை நான் சுட்டிக்காட்டி, அங்கு தான் கார் இருக்கிறது என்று கூறினேன்.

தரையில் காயமடைந்த நிலையில் கிடந்தவரை விபத்துப் பிரிவுக்குக் கொண்டு செல்லும்படி அந்த நபர் என்னைக் கேட்டுக் கொண்டார்.

எனது வாகனம் பழுதடைந்திருந்தாலும் குண்டு வெடிப்பினால் எனது வாகன சாரதியின் காது செவிடாகி விட்டதாலும் காயமடைந்தவரை எனது வாகனத்தில் ஏற்றிச் செல்ல நான் மறுத்தேன்.

நீதிபதி: சம்பவம் நடந்த இடத்துக்கு நீர் வந்தபோது உங்களுக்கு உங்களின் ஜீப் பழுதடைந்ததும் சாரதி காயமடைந்ததும் தெரிந்ததா?

சாட்சி: ஆம், சிவிலியன் வாகனத்தை நிறுத்தி காயமடைந்தவரை ஏற்றிச் செல்லும்படி என்னைக் கேட்டவரிடம் நான் கூறினேன். அப்போது பொலீஸ் கார் ஒன்றில் காயமடைந்தவர் ஏற்றிச் செல்லப்படுவதைக் கண்டேன்.

பிரதம இன்ஸ்பெக்டர் காமினி திஸநாயக்கா: குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி நீர் ஏன் பொலீஸாருக்கு தெரிவிக்கவில்லை?

சாட்சி: இச் சம்பவம் பற்றி மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவுக்கும் கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஹமில்டன் வணிகசூரியவுக்கும் தெரிவித்தேன். பொலீஸாருக்கு அறிவிக்கும்படி இராணுவத் தலைமைக் காரியாலயம் எனக்கு ஆலோசனை கூறவில்லை. ஆனால் அன்று பிற்பகல் 1 20 மணியளவில் கோட்டை பொலீஸ் பொறுப்பதிகாரியைச் சந்திக்கும்படி கோரப்பட்டேன். அதன்படி அவரைச் சந்தித்தேன். (த-எ)

## வேலூரில் தப்பியோரைத் தேடி

## கர்நாடகம், ஆந்திராவுக்கு விசேட பொலீஸ் படைகள்

சென்னை, நவ. 20

வேலூரில் தடுப்பு முகாம் ஒன்றில் இருந்து தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்க அனுதாபிகள் எனக் கூறப்படுவோரை கண்டுபிடிப்பதற்காக விசேட பொலீஸ் படைப்பிரிவுகள் கர்நாடகம் மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகின்றது.

ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் பத்மநாபா உட்பட 13 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி புலன் விசாரணை செய்யும் தமிழக பொலீஸ் அதிகாரி கே. வி. பத்ம தற்போது வேலூரில் தங்கி இருந்து விசாரணையை நடத்தி வருகிறார். (இ-எ)

## சிசில் மீது நம்பிக்கை தெரிவித்து அறிக்கை

### வெளியிட பிரதமர் பணிப்பு

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா மீது பூரண நம்பிக்கை உண்டு என்று தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை விடுக்கும்படி பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவைப் பணித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு அதிகாரங்களைக் கொடுத்ததை வைத்திய ரத்னா எதிர்ப்பதால்— இம் மாத இறுதியில் அவர் இளைப்பாறும்படி கேட்கப்படுவார் என்று ஒரு சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதைத் தொடர்ந்தே பிரதமர் இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்;

கூட்டுப்படைக் கட்டமைவில் வாக்குவாதங்கள் ஏற்படுவது உண்டென்பதை ஒப்புக்கொண்ட பிரதமர்— தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலுடன் கலந்தாலோசித்த பின்பே இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் சொன்னார்; (த)

## தமிழீழ மீட்பு நிதி மீளப் பெறுபவர்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழீழ மீட்பு நிதி செலுத்தியோரில், மாவீரர் தினத்தை ஒட்டி கடன் மீளளிப்பு செய்யப்பட உள்ள ஆயிரம் பேரில் ஒரு தொகுதியினரின் கடன் பத்திர இலக்கங்கள் ஏற்கனவே உதயனில் வெளியாகி இருந்தன.

உடுவில், பச்சிலைப்பள்ளி ஆகிய உ. அ. அ. பிரிவுகளில் கடனை மீளப் பெற உள்ளோரின் கடன் பத்திர இலக்கங்களும், வெளியகல்வு இலக்கங்களும் வருமாறு:

### உடுவில்

மாசி — 1992
யா/உ/ 93 465 924
1360 1781

பங்குனி — 1992
யா/உ/ 294 712 716
1218 1254

சித்திரை — 1992
யா/உ/ 76 310 377
695 913

வைகாசி — 1992
யா/உ/ 171 657 1247
1581 2838

ஆனி — 1992
யா/உ/ 10 83 818
526

ஆடி — 1992
யா/உ/ 386 823 1278
2618

ஆவணி — 1992
யா/உ/ 84 456 758
2902

புரட்டாதி — 1992
யா/உ/ 59 2147 2464
2514 2885

ஐப்பசி — 1992
யா/உ/ 65 [illegible] [illegible]
742 1970

கார்த்திகை — 1992
யா/உ/ 251 331 531
645 2765

### பச்சிலைப்பள்ளி

மாசி — 1992
கி/ப/ 571

பங்குனி — 1992
கி/ப/ 478

சித்திரை — 1992
கி/ப/ 811

வைகாசி — 1992
கி/ப/ 52

ஆனி — 1992
கி/ப/ 454

ஆடி — 1992
கி/ப/ 312

ஆவணி — 1992
கி/ப/ 09

புரட்டாதி — 1992
கி/ப/ 357

ஐப்பசி — 1992
கி/ப/ 624

கார்த்திகை — 1992
கி/ப/ 164

### வெளியகல்வு

மாசி — 1992
யா/வெ/ 459 1107 1236

பங்குனி — 1992
யா/வெ/ 201 335 629

சித்திரை — 1992
யா/வெ/ 17 114 853

வைகாசி — 1992
யா/வெ/ 92 188 1238

ஆனி — 1992
யா/வெ/ 30 890 1080

ஆடி — 1992
யா/வெ/ 331 371 652

ஆவணி — 1992
யா/வெ/ 155 875 280

புரட்டாதி — 1992
யா/வெ/ 561 611 725

ஐப்பசி — 1992
யா/வெ/ 30 [illegible] [illegible]

கார்த்திகை — 1992
யா/வெ/ 42 803 872

## இஸ்லாமபாத் செல்ல பெனாசிருக்குத் தடை!

இஸ்லாமபாத், நவ. 20

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் 30 தினங்களுக்குக் கால் வைக்கக்கூடாது என்று முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கு பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான அரசாங்கம் தடை விதித்துள்ளது;

ராவல்பிண்டியில் இருந்து இஸ்லாமபாத்துக்கு மக்கள் கட்சித் தொண்டர்களுடன் நடை பயணம் மேற்கொண்ட சமயம் பெனாசிர் பூட்டோவை கடந்த புதன் அன்று பாகிஸ்தான் பொலீஸார் கைது செய்தனர்.

இஸ்லாமபாத்துக்கு வெளியேயுள்ள பகுதி ஒன்றில் பெனாசிர் பூட்டோ தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ஷெரீப் அரசு பதவி விலக வேண்டும்; புதிதாகப் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று கோரி இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படவிருந்தது; (த-எ)

## தமிழக அகதி முகாம்களை சோதனையிட உத்தரவு

வேலூரில் உள்ள பொலீஸ் பயிற்சி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தப்பிச்சென்ற விடுதலைப் புலிகள் இயக்க அனுதாபிகள் என்று சந்தேகிக்கப்படும் 19 இலங்கைத் தமிழர்களையும் கண்டு பிடிக்கும் ஒரு நடவடிக்கையாக தமிழகத்தில் உள்ள அனைத்து அகதி முகாம்களையும் சோதனையிடும்படி பொலீஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது

வேலூர் கோட்டையில் விசேட முகாமின் பாதுகாப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

(மற்றும் ஒரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## தமிழன் மார் தட்டி நிற்கின்றான் இதுவே மாவீரர் தந்த முதல் பரிசு

உலகில் ஒடுக்கப்படுகின்ற ஒவ்வொரு இனமும் புரிந்து கொண்டிருக்கின்றது. "எந்த வல்லரசினாலும், எந்த நவீன ஆயுத படைக்கலங்களினாலும் நசுக்கப்பட முடியாதது உரிமைப் போர்." இந்த உன்னத மொழியினை உலகிற்கே பகிர்ந்து நிற்கிறது எம் மாவீரர் தற்கொடை.

மேடையேறி முழங்கியவர் வீரத்தைக் காட்டு!" - வாய் திறந்து சொன்னவர்களல்லர்; பேச்சிலும் செயலே சிறந்த போதனை என்ற கோட்பாட்டைக் கொண்டவர்கள் மாவீரர்கள். தமது ஒவ்வொரு அசைவிலும், ஒவ்வொரு நடைமுறையிலும் உணர்த்தி நின்றார்கள்.

உலகின் ஒவ்வொரு உரிமைப் போராட்டத்திற்கும்

## மாவீரர் நினைவுச் சித்திரம்

அவர்கள் மாவீரர்கள்; வெட்டிப் பேச்சுப் பேசும் "வாய்ச் சொல் வீரர்' களுமல்லர். ஆயினும், உலகுக்கு எல்லாம் அறிவித்து நிற்கிறார். "தாயகம் வேண்டும் காதலைக் காட்டு! விடுதலையிடம் விசுவாசத்தைக் காட்டு, சமர்களத்தே

முன்னுதாரணமாய், வழிகாட்டியாய் மிளிர்கின்றது தமிழீழ விடுதலைப் போர்.

ஒவ்வொரு தமிழீழ குடிமகனும் மார்தட்டி நிமிர்கின்றான்; இது தம் மக்களுக்கு மாவீரர் தந்த முதல் பரிசு.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரு.-கொழும்பு கப்பல் சேவைக்கு செஞ்சிலுவை உதவி கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், நவ. 20

பருத்தித்துறைக்கும் கொழும்புக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை நடத்துவதற்குத் தேவையான உதவிகள் மற்றும் பாதுகாப்பை வழங்குமாறு கூட்டுப்படைத் தலைமையகம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் கேட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கிற்கான பயணிகள் கப்பல் சேவை நடத்துவது தொடர்பாக கொழும்பில் கடந்தவாரம் விசேட மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

இம்மாநாட்டில் கூட்டுப் படைத் தலைமையகம், புனர்வாழ்வு அமைச்சு, துறைமுகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகரும் இதில் கலந்து கொண்டார்.

இந்தச் சேவைக்காக லண்டனுக்கும் பிரான்ஸுக்குமிடையில் சேவையில் ஈடுபடும் "கூளர் கிராப்" என்னும் நவீனக்கப்பல் இங்கு கொண்டு வரப்படவிருக்கிறது.

குறைந்தளவு தண்ணீர் உள்ள கரைக்கும் வரக்கூடிய இந்தக் கப்பலில் 600 பயணிகள் செல்லலாம். குளிரூட்டப்பட்ட இருக்கைகளும் சாதாரண இருக்கைகளும் இருக்கும். பருத்தித்துறையில் இருந்து 7 மணி நேரத்தில் இந்தக் கப்பல் கொழும்பு சென்றடையும். ஒருவழிக் கட்டணமாக அண்ணளவாக 400 ரூபா அறவிடப்படும்.

இக்கப்பல் 45 நாட்களில் இலங்கை வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை - கொழும்பு கப்பல்சேவை நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, வாரத்தில் 2 அல்லது 3 தடவைகள் சேவை நடத்தவும் ஏற்பாடு நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## இளாலியில் தாக்குதல்

இளாலி கடற்பிராந்தியத்தில் இருந்து கடற்படையினர் நேற்று சரமாரியாக பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து நேற்று இரவு படகுச்சேவை இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## அரச அதிபர் மூலம் உறவினருக்கு கடிதங்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தமது உறவினர்களுக்கு யாழ். அரச அதிபர் மூலமாகக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

உறவினர்கள் அந்தக் கடிதங்களை செயலகத்தில் இன்று பெறலாம் என அரச அதிபர் தெரிவித்தார். (இ-3)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 20

உடுவில் நாகம்மாள் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட அலிஸ்ரன் சனசமூக நிலையம், மாவீரர் பாலர் கல்வி நிலையம், பெண்கள் தையல்பயிற்சி நிலையம் ஆகியன இன்று பிற்பகல் 4 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர். இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-5 30)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் மீசாலை அல்லாரை தெற்கில் நிறுவப்பட்ட மாவீரர் விஜனா நினைவுப் பாலர் பாடசாலை இன்று முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (ஒ-5)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ. 20

கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டம் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் திருமலை நட்சத்திரங்கள் வி. க. அணியை எதிர்த்து மயிலங்காடு ஸ்ரீ முருகன் வி.க அணி மோதும். (உ)

## வவுச்சர்கள்

நவம்பர் மாதத்துக்குரிய பென்ஷன் வவுச்சர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி 'குமண' கப்பலில் எடுத்து வரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## வழிகாட்டி நூலை பார்வையிடலாம்

அவுஸ்திரேலிய வியூகாசில் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயில்வது சம்பந்தமான விவரங்கள் அடங்கிய வழிகாட்டி நூலை இப்போது வாசகர்கள் பார்வையிடலாம்.

இல: 15, இரண்டாவது ஒழுங்கை மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் பணிமனையில் இந்த வழிகாட்டி நூலை வாசகர்கள் இன்று முதல் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (அ-8)

## மாவீரர் வாரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொது இடங்களையும் சுகாதாரத்துடன் வைத்திருக்கும் பணிகளில் மக்கள் மனப்பூர்வமாக ஈடுபாட்டுடன் கலந்து கொண்டதைக் காண முடிந்தது.

நாளை ஆரம்பமாகும் மாவீரர் வார நிகழ்ச்சிகள் பின்வருமாறு அமையும்:-

★ நாளை காலை 9.00 மணிக்கு அலுவலகங்கள், பாடசாலைகள், பொது இடங்கள், விடுதலைப் புலிகளின் பாசறைகள், முகாம்கள் ஆகியவற்றில் தேசியக் கொடி ஏற்றப்படும்.

★ தினமும் கொடிக்கு மலர் தூவி அஞ்சலி செய்யப்படும்.

★ வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கோட்டங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் காலை 9.00 மணி முதல் பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும், மலரஞ்சலி செய்வர்.

★ தினமும் வட்டாரரீதியாக இரு மாவீரர் நினைவுக் கூட்டங்கள் நடைபெறும். அவற்றில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் உரைகளும், மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ மாவீரர் நாளான 26 ஆம் திகதி நள்ளிரவு ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் மாவீரர் அஞ்சலி ஒலி எழுப்பப்படும். அந்த ஒலி கேட்டு மக்கள் அனைவரும் தாம் இருக்கும் இடங்களில் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவர். அதன் பின்னர் சகல இடங்களிலும் சுடர் ஒளி ஏற்றப்படும்.

★ 26 ஆம் திகதி மாவீரர் குடும்பத்தினர் கௌரவிக்கப்படுவர்.

★ 27 ஆம் திகதி மாலை 5 மணிக்கு தேசியக் கொடி இறக்கப்படும்.

★ அன்று கோட்ட ரீதியாக மாபெரும் பொதுக் கூட்டங்கள் நடைபெறும். (அ-8-162)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேய ஐயர் விஸ்வநாதக் குருக்கள் (மாப்பிளை ஐயர்)

கார்த்திகேய ஐயர் - விஸ்வநாதக் குருக்கள் (மாப்பிளை ஐயர்) 16-11-92 (திங்கட்கிழமை) இல் காரைநகரில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேய ஐயர் (சின்னப்பு ஐயர்) சௌந்தராம்பிகை அம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதீஸ்வரக் குருக்களின் மருமகனும், காலஞ்சென்ற திருவேங்கட அம்மா (மீனாம்பாள்) அவர்களின் அன்புக் கணவரும், நாகராஜேஸ்வரன், இராஜலட்சுமி, கார்த்திகேயசிவி, ஈஸ்வரக் குருக்கள் (சுழிபுரம் சிதம்பரம் பிரதம குருக்கள், காரைநகர்), பரமேஸ்வரி, சஸ்னி (சிங்கப்பூர்) காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ண ஐயர், சேஷாமணி ஐயர், குமாரசாமிக் குருக்கள், மகேஸ்வர சர்மா, மலர் பத்மலோசனி ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகரத்தின அம்மா, செல்லம் அம்மா (சிங்கப்பூர்) காலஞ்சென்ற மங்களம் அம்மா, ஸ்ரீநிவாச ஐயர், பூரணம் அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ருக்மணி (உமா), சிதம்பரராஜக் குருக்கள் (அவுஸ்திரேலியா), ரவி, குஞ்சு ஜானகி (தேவி) சிவயோகீஸ்வர சர்மா, ரங்கன், வாகீஸ்வரி, அசோகன், பால்ராஜ் சர்மா-பாலபத்மினி, சிவசாமி தினேஸ்சர்மா (ராசா), புவனேஸ்வரி - அம்பிகைபாகன் (மட்டக்களப்பு), கல்யாணி, காலஞ்சென்ற சயந்தசிறி (கப்டன் சரத்பாபு), சண்முகன், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனாரும், ஸ்ரீலட்சுமி (அவுஸ்திரேலியா), நவீனன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 17-11-1992 (செவ்வாய்க்கிழமை) இல் காரைநகரில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

V. நாகராஜேஸ்வரன் (ராஜன்)
V. ஈஸ்வரக் குருக்கள்
(பிள்ளைகள்)

குடியிருப்பு,
சுழிபுரம்
(23330)

### குணரெத்தினம் செல்லத்துரை (நயினாதீவு - வவுனியா கணக்கப்பிள்ளை)

இவர் காலஞ்சென்ற நயினாதீவு குணரெத்தினம் இராமசிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், முருகேசு வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், செல்லம்மாவின் கணவருமாவார். இவர் 17-11-1992இல் வவுனியாவில் காலமானார் என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்

தகவல்:

திருமதி செ. பத்மநாதன் (சகோதரி)

13/1 A,
கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி.
(23322)

### டாக்டர் அ. இராஜதுரை (வட்டுக்கிழக்கு - வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை, மாவடியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உதவி வைத்தியர் இராஜதுரை காலமானார். இவர் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி வே. அருந்தவச்செல்வி (ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), திருமதி ந. அருட்செல்வி (கொழும்பு), செல்வி கலைச்செல்வி (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அருட்செல்வன் (நிர்வாக இயக்குனர், நியூ சயன்ஸ் அக்கடமி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வி. வேலுப்பிள்ளை (மின்பொறியியலாளர், யாழ்ப்பாணம்), நரேந்திரராசா (கொழும்பு), திருமதி திலகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நேற்று வழக்கமான மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:

இ. வசந்தகுமார்
(நியூ சயன்ஸ் அக்கடமி)

(23331)

## மண்டைதீவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்க சர்வதேசக் குழு அல்லது ஏனைய அமைப்புகளிடமும் முறையிட்டனர். இருந்தும் கைதான ஐந்து பேர் காணாமற் போனவர்களாகவே கருதப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு மன்னிப்புச் சபையின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனகசபை சதீஸ்வரன் (29 வயது), திருநாயகம் சட்டநாதபிள்ளை (31 வயது), சுகுமார் என்றழைக்கப்படும் அகஸ்டின் அழகராஜா (19 வயது, மாணவன்), ராமசாமி ரவிச்சந்திரன் (18 வயது), திருநாவுக்கரசு ரவிக்குமார் (32 வயது) ஆகியோரே காணாமற் போனவர்கள் என்றும் மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## செட்டிகுளத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டல், ஏ. கே. எல். எம். ஜி. இரண்டு உட்பட பெருமளவு நவீன ஆயுதங்களையும் இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இதேவேளை—

வவுனியா மாவட்டத்தில் இராணுவ பதுங்கு குழிகளை நோக்கி விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும், மூன்று படையினர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ஒ-எ-5)

## இனப்பிரச்சினைக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையில், "இலங்கை இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காணும் முன் முயற்சியில் பொதுநலவாய அமைப்பை (Commonwealth) ஈடுபடச் செய்வதற்கு அவுஸ்திரேலியா உதவத் தயாராக இருக்கிறது என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்"— என்று அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் செனட்டர் கரேத் ஈவான்ஸ் தெரிவித்திருந்தார்.

திரு. ஈவான்ஸின் உரை குறித்து விளக்குகையிலேயே கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய பிரதித்தூதர் திருமதி ஸ்ரேபானி ஷோ அப்ஸ்கி முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய செனட்டில் திரு. ஈவான்ஸ் மேலும் பேசுகையில் "இலங்கையின் உள் விவகாரங்களில் பொதுநலவாய அமைப்பு நாடுகள் தலையிடுவதற்கு இலங்கை அரசு நேரடியாக கோரிக்கை விட வேண்டும் என்பதிலும்—

"அந்தக் கோரிக்கை பொதுநலவாய அமைப்பின் ஏனைய உறுப்பு நாடுகளின் ஆதரவு பெற்றதாக இருக்கவேண்டும் என்பதிலும்—

அவுஸ்திரேலியா ... இருந்தார்.

## இரு வேங்கைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரம் - அம்பிகை), மேஜர் சிலம்பரசன் அல்லது கிங்ஸ் தனபாலசிங்கம் சிவபாலேஸ்வரன் - சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா) ஆகிய இரு வேங்கைகள் வீரமரணமடைந்தனர். (ஒ-5)

## படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

1990 ஆண்டில் இருந்து ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.டி.பி ஆகிய குழுக்களும் படையினருடன் சேர்ந்து சண்டையில் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை —

பல்வேறு தமிழ்க் குழுக்களை விட்டு வெளியேறியவர்களை அரசப் படையினர் திரட்டி அவர்களுக்கு தனியாக பயிற்சி அளித்து அரசப் படையினரின் சண்டையிடும் பலத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கூடுதலானோரைத் தந்து உதவும்படி தமிழ்க் குழுக்களை இராணுவம் கடந்த மூன்று மாதங்களாகக் கேட்டு வருவதாக தமிழ்க் குழு ஒன்றின் பேச்சாளர் தெரிவித்தார்.

தமிழ்க் குழுக்களில் இருந்து திரட்டப்படுபவர்களுக்கு ஆயுதங்கள், வெடி மருந்துகள், உணவு மற்றும் தேவைகளை அரசாங்கமே வழங்கி வருகின்றது.

விடுதலைப் புலிகளினால் இராணுவத்துக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள், படையினர் பலர் தலைமறைவாகுவது ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள பற்றாக் குறையை நீக்க தமிழ்க் குழுக்களின் உதவியை இராணுவம் நாடியுள்ளதாகச் சொல்லப்படுகிறது" (அ-எ)

## பலத்த...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மற்றும் அவருடன் கொல்லப்பட்ட ஏனைய அதிகாரிகளின் மரணச் சடங்குகள் கடந்த ஆகஸ்டில் நடந்தபோது இடம்பெற்றது போன்ற கலவரங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதும் நேற்று எவ்வித வன்முறைகளும் இடம்பெறவில்லை எனச் செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

## கைப்பற்றிய ஆயுதங்கள்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

| | |
|---|---|
| ★ ரி - 56 மகஸின் | — 17 |
| ★ ஜி - 3 மகஸின் | — 05 |
| ★ எஸ். எல். ஆர். மகஸின் | — 01 |
| ★ தொடர் ரவை | — 600 |
| ★ நடுத்தர ரவை | — 2,500 |
| ★ ஏ. கே. ரவை | — 165 |
| ★ கிரனேட் | — 01 |
| ★ ஜே ஆர் கிரனேட் | — 06 |
| ★ ரீ. என். ரி கிரனேட் | — 01 |
| ★ ஏ. கே. ஹோல்ஸர் | — 04 |
| ★ ஹெல்மெட் | — 06 |
| ★ பயனட்டுகள் | — 04 |
| ★ தண்ணீர் தாங்கி அணி | — 02 |
| ★ இராணுவப் இடுப்புப் பட்டி | — 04 |
| ★ மழைக் கவசம் | — 02 |
| ★ இராணுவப் பை | — 06 |
| ★ சப்பாத்து | — 5சோடி |
| ★ கிளைமோர் வெடிக்கவைக்கும் கருவி | — 01 |

(ஒ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 361 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org